# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 82,83 மற்றும் 84/மா/2016

ஆணை எண். 95/2017

நாள் : 04/05/2017

திரு கே. மீன் ஆறுமுகம்,
கொளத்தூர்,
சென்னை – 600 099. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – 6,
சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை மாநகராட்சி, கொளத்தூர், எண்.172, 4வது தெரு, பாரத் இராஜீவ் காந்தி நகர் பகுதியில் வசிக்கும் திரு கே. மீன் ஆறுமுகம் என்பவரின் 02.02.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.02.2016 அன்று பெறப்பட்டு, 82/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட நாளில் முறையீட்டு மனுதாரரின் வேறு இரண்டு முறையீட்டு மனுக்களும் பெறப்பட்டு 83/2016 மற்றும் 84/2016 எண்களிட்ட முறையீட்டு மனுக்களாகவும் பதிவு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட மூன்று முறையீட்டு மனுக்கள் சம்பந்தமாக சென்னை மாநகராட்சி ஆறாவது மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, கொளத்தூர், எண்.172, நான்காவது தெரு, பாரத் இராஜீவ் காந்தி நகர் பகுதியில் வசிக்கும் திரு கே. மீன் ஆறுமுகம் என்பவர் கீழ்க்காணும் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார் :-

(1) கொளத்தூர், 64–வது வட்டம், 100 அடி சாலை, சர்வே எண்.11–ல், 2.2 ஏக்கர் ரெட்டியார் காலனி என்ற நிலம் ஆக்கிரமிப்புக்கு உள்ளானது ;

(2) வடசென்னை, கொளத்தூர், செந்தில் நகர் முதல் ரெட்டேரி வரை 100அடி சாலையில், 1700 மீட்டர் சாலையின் இருபுறமும் 20 அடி தூரத்திற்கு ஆக்கிரமிப்பு செய்து வெள்ள மழைநீர் போக்கு கால்வாய் ஆக்கிரமணம் குறித்து ;

(3) பாரத் இராஜீவ் காந்தி நகர் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரக் கோருதல்;

2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று முறையீடுகள் குறித்தும் முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 25.10.2016 அன்று நடைபெற்ற விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர், வடசென்னை கொளத்தூர் பகுதியில் சர்வே எண்.11–ல் சுமார் 2.2 ஏக்கர் நிலம் (பார்வதியம்மன் நகர்) தனிநபர் திரு எம். ஆறுமுகம் ரெட்டியார் மற்றும் சீனிவாசன் ஆகியோரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மேலும், கொளத்தூர் செந்தில் நகர் முதல் ரெட்டேரி வரை, 100 அடிசாலையில் 1200 அடி தொலைவிற்கு இருபுறம் 20 அடி வரை ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி உள்ளதால், வெள்ளப்பெருக்கின்போது இப்பகுதி பாதிப்புக்குள்ளாகிறது என்றும் குறிப்பிட்டார். பாரத் இராஜீவ் காந்தி நகர் பகுதிமக்கள் கடந்த 30 ஆண்டுகளாக எந்தவித அடிப்படைவசதியுமின்றி சிரமத்திற்குள்ளாகின்றனர் என்றும் முறையீட்டு மனுதாரர் விசாரணையின்போது தெரிவித்தார்.

3. முறையீட்டு மனுதாரரின் மேற்படி முறையீடுகள் குறித்து 09.03.2016 நாளிட்ட அறிவிக்கை எண்கள் 82/16, 83/16 மற்றும் 84/16–ல் மண்டல அலுவலரின் அறிக்கைகள் கோரப்பட்டன. சென்னை மாநகராட்சி ஆறாவது மண்டல அலுவலரும், தனது 22.06.2016 நாளிட்ட கடித எண்கள் முறையே 5645/2016, 5642/16 மற்றும் 5643/16–ல் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளார். மேலும், 09.01.2017 அன்று மண்டல அலுவலர் விசாரணைக்கு வருகை தந்து, விசாரணையின்போது தெரிவித்தபடி மேற்குறிப்பிட்ட முறையீடுகள் சம்பந்தமாக ஒட்டுமொத்த அறிக்கையினையும் 09.02.2017 நாளிட்ட கடித எண்.2030/அ1/2017–ல் சமர்ப்பித்துள்ளார். மேற்குறிப்பிட்ட அறிக்கையில் முறையீடு வாரியாக கீழ்க்காணும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது :-

<u>முறையீடு - I</u> கொளத்தூர் கிராமம், பிளாக் எண்.4, நகர நில அளவை எண்.2/1–ல் உள்ள 2.20 ஏக்கர் நிலம் வருவாய்த் துறை நிரந்தரப் பதிவேட்டில், ஏரி மற்றும் ஏரி உள்வாய் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் உபயோகம் ஏரி எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நிலம் மாநகராட்சியால் பராமரிக்கப்படவில்லை எனவும் ஆக்கிரமிப்பு தொடர்பாக வருவாய்த்துறை / பொதுப்பணித்துறையை அணுகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

<u>முறையீடு – II</u> சென்னை, கொளத்தூர் ஜவகஹர்லால் நேரு தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் உள்ள கால்வாய் மாநில நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமானது என்றும், அக்கால்வாய் மாநகராட்சியால் பராமரிக்கப்படவில்லை என்றும் ஆக்கிரமிப்பு தொடர்பாக மாநில நெடுஞ்சாலைத் துறையை அணுகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>முறையீடு - III</u> பாரத் இராஜீவ் காந்தி நகர் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தருவது சம்பந்தமாக, அப்பகுதியிலுள்ள நிலம் 'அ' பதிவேட்டின்படி ஏரி உள்வாய் சர்க்கார் புறம்போக்கு என்றும் தற்போதைய நிரந்தரப்பதிவேட்டின் படி இரயத்து மனை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், இது சம்பந்தமான வழக்கு 10–வது உதவி நகர உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நில உரிமை இல்லாதவருடைய 63 சொத்து வரி மதிப்பீட்டாணைகள் 08.03.2016 அன்று செயலிழக்கம் செய்யப்பட்டுள்ளது என்றும், சம்பந்தப்பட்ட நிலமும் அதில் உள்ள தெருக்களும் மாநகராட்சிக்கு சொந்தமல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் முறையீடுகள், விசாரணையின்போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கைகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள நிலப்பகுதிகளான ஏரி மற்றும் கால்வாய்கள் மாநகராட்சியின் பராமரிப்பில் இல்லாமல் உள்ளன. மேலும், பாரத் இராஜீவ் காந்தி நகர் பகுதி சம்பந்தப்பட்ட நிலமும் நீதிமன்ற வழக்கிற்கு உட்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளே நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். மேலும், பாரத் இராஜீவ் காந்தி நகர் பகுதிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரக் கேட்ட பகுதி இரயத்து மனை என்றும் 'அ' பதிவேட்டின்படி ஏரி உள்வாய் சர்க்கார் புறம்போக்கு என்றும் இருப்பதால் ஏற்பட்ட முரண்பாடுகளின் விளைவினால் உரிமையியல் நீதிமன்ற வழக்கு ஏற்பட்டு நிலுவையில் உள்ளதால் அப்பகுதியில் குடியிருக்கும் நபர்களுக்கு அடிப்படை வசதிகளும் மாநகராட்சியால் செய்ய இயலாது. எனவே, முறையீட்டு மனுதாரர் தனது முறையீடுகள் சம்பந்தமாக உரிய துறைகளை நாடுவதே முறையாகும் எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 4–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு கே. மீன் ஆறுமுகம்,**
   **எண்.172, 4–வது தெரு,**
   **பாரத் இராஜீவ் காந்தி சாலை,**
   **கொளத்தூர், சென்னை – 600 099.,**

2. **மண்டல அலுவலர்,**
   **மண்டலம் – 6,**
   **சென்னை மாநகராட்சி,**
   **எண்.5, ஆண்டர்சன் சாலை,**
   **அயனாவரம், சென்னை – 600 023.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேருராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்